# இந்திய இணையதள விடுதிகள் சங்கம் (CCAOI)

*செய்தி மடல்* டிசம்பர், **2009**

## இந்திய இணையதள விடுதிகள் சங்கம் (CCAOI), இந்திய இணையதள சேவை வழங்குவோர் சங்கம் (ISPAI) - புரிந்துணர்வு ஒப்பந்தம்

இந்திய இணையதள விடுதிகள் சங்கம், அண்மையில் இந்திய இணையதள சேவை வழங்குவோர் சங்கத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இவ்விரு சங்கங்களும், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலை தொடர்பு களத்தில் இணைந்து ஒத்துழைத்து பணியாற்றி பரஸ்பரம் அவரவர் வர்த்தகத்தை மேம்படுத்த உழைப்பது என உறுதி செய்யப்பட்டது.

## இந்திய இணையதள விடுதிகள் சங்கம் (CCAOI), " Lookeys" நிறுவனம் - உடன்பாடு

இந்திய இணையதள விடுதிகள் சங்கம், இந்திய மொழிகளின் முன்னேற்றத்திற்காக"LooKeys" என்ற நிறுவனத்துடன் உடன்பாட்டினை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. இந்நிறுவனத்தினர், இந்திய மொழிகளாகிய இந்தி, வங்காளம், தமிழ், தெலுங்கு, மராத்தி, குஜராத்தி, கன்னடம், மலையாளம், பஞ்சாபி, உருது, அஸ்ஸாமி மற்றும் ஒரியா போன்ற மொழிகள் மூலமாக முன்கூட்டியே உணரக்கூடிய விசைப்பலகையை(predictive virtual keyboard) பயன்படுத்தி தரவுகளை உடன் நிகழாகவோ(on line)அல்லது பின் தொடராகவோ(Off line)எளிதாக உள்ளீடு செய்யும் வசதிகளை கணினி பயன்படுத்துவோர்க்கு வழங்குகிறார்கள்.

## தொலைத் தொடர்பு மற்றும் இணையதள தொழில் துறையினர் - மத்திய அமைச்சர் சந்திப்பு

தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொடர்பு துறை மத்திய அமைச்சர் மாண்புமிகு திரு.ஆ.இராசா அவர்களை தொலைத் தொடர்பு மற்றும் இணையதள தொழில் துறையினர் சந்தித்தனர். அச்சமயம், இப்பிரதிநிதிகள் இணையதள பயன்பாட்டாளர்களின் விருப்பங்களை தெரிவித்தனர். இணையதள ஊடுருவலை அதிகரிக்க செய்வதில், இணையதள விடுதிகள் ஆற்றி வரும் குறிப்பிடத்தக்க பணியை பற்றியும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எடுத்துரைத்தனர். அச்சந்திப்பின்போது அமைச்சர் அவர்களும், இந்தியாவின் இணையதளம் மற்றும் அகன்ற அலைவரிசை நிலையை குறித்த தன்னுடைய அக்கறையை வெளிப்படுத்தினார்.

## ICANN, IDN ccTLD எனும் விரைவு தட செயல்பாடு தொடக்கம்

ஒதுக்கப்பட்ட பெயர் மற்றும் எண்ணுக்கான இணையதள கழகம் (ICANN –Internet Corporation for Assigned Names and Numbers), இலத்தீன் அல்லாத பிற மொழிகளை பயன்படுத்தும் நாடுகளை அனுமதிக்கும் விதமாக IDN ccTLD எனும் விரைவு தட செயல்பாட்டினை தொடங்கியுள்ளது. மேலும், நாட்டின் பெயரை பிரதிபலிக்கக்கூடிய வகையில் உயர்மட்ட வலைதள பெயர்களை பிராந்திய மொழிகளில் கேட்டுள்ளது.

IDN ccTLD எனும் விரைவு தட செயல்பாடு, நாட்டில் இலத்தீன் அல்லாத பிற மொழிகளில் வலைதள பெயர்களை வழங்குவதற்கு உதவிகரமாக இருக்கும். இனி இலத்தீன் மொழியிலான வலைதள பெயர்கள் தேவைப்படாது. பிராந்திய மொழிகளில் செய்திகளை பரிமாறிக்கொண்டு இணையதளத்தை அலசும் பெரும்பான்மையான மக்களை கொண்ட இந்தியா போன்ற நாடுகளுக்கு இது ஒரு மிகப் பெரிய வரப்பிரசாதமாக இருக்கும். ICANN, ஏற்கெனவே இந்தியாவின் ஏழு பிராந்திய மொழிகளாகிய இந்தி, உருது, வங்காளம், தமிழ், தெலுங்கு, பஞ்சாபி மற்றும் குஜராத்தி மொழிகளை அங்கீகரித்துள்ளது.

## GNSO-வில், இணையதள விடுதிகளுக்கான தனி தொகுதி வேண்டிய விண்ணப்பத்திற்கான முயற்சிகள்

இந்திய இணையதள விடுதிகள் சங்கம், ஒதுக்கப்பட்ட பெயர் மற்றும் எண்ணுக்கான இணையதள கழகத்தின் (ICANN –Internet Corporation for Assigned Names and Numbers) GNSO –வில் தன் பிரதிநிதித்துவம் தனி தொகுதியாக இருக்க வேண்டும் என்பதை உணர்ந்து அதற்கான முயற்சிகளை தொடங்கியுள்ளது. இந்தியா போன்ற முன்னேறும் நாடுகளில் இணையதள விடுதிகள் குறிப்பிடத்தக்க பணியினை செய்வதால் அவற்றின் பிரதிநிதித்துவம் இணையதள சூழலியல் முன்னேற்றத்திற்கு பெரிதும் அவசியமாகிறது. இந்நாடுகளில், இணையதள விடுதிகள், பொது மக்களுக்கு இணையதள சேவை வழங்குவோரை போன்று செயல்படுகின்றது. இந்தியாவில் 101 மில்லியன் இணையதள பயன்பாட்டாளர்கள் உள்ளனர். அவர்களில் 37% மக்கள் 1,80,000 இணையதள விடுதிகளை பயன்படுத்தி இணையதளத்தை நாடுகின்றனர். இணையதள விடுதிகள் மூலம் பல இலட்சக்கணக்கான இணையதள பயன்பாட்டாளர்களை தொடர்பு கொள்ளலாம் என்பதால், இணையதள சூழலமைப்பில் இவர்களை புறந்தள்ளி விடமுடியாது.

பதிப்புரிமை © 2009 CCAOI –க்கு உரியது

**இந்திய இணைய தள விடுதிகள் சங்கம்**

C - 427B, சுஷந்த் லோக், Phase 1, குர்கான் – 122002. +91 124 4047508

இணைய தளத்தில் எங்களை நாட : www.ccaoi.in

கருத்துகளுக்கும் ஆலோசனைகளுக்கும் மின்னஞ்சல் முகவரி :info@ccaoi.in